# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 128** **நாள்:01.09.2018**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தை உள்ளடக்கிய 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலை பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (வருவாய்(ம)நிதி) திருமதி. ஆர். லலிதா இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.09.2018) ரிப்பன் மாளிகை, கூட்டரங்கில் அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் வெளியிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சென்னை மாவட்டத்தில் உள்ளடக்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் 01.01.2019–ஆம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு 2019 ஆம் ஆண்டின் சிறப்பு சுருக்க முறை திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது. மேற்படி வரைவு வாக்காளர் பட்டியல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் 4, 5, 6, 8, 10 மற்றும் 13 வாக்குச்சாவடி மையங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். பொதுமக்கள் தங்களது பெயர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் குறித்த விபரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா அல்லது இல்லையா என்பது குறித்து சரிபார்த்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காமல் உள்ளவர்கள் மற்றும் 01.01.2019 அன்று 18 வயது நிறைவு அடைகின்றவர்கள் ( 01.01.2001 ஆம் தேதிக்கு முன்பிறந்தவர்கள்) படிவம் 6–னை பூர்த்தி செய்தும், பெயர்கள் நீக்கம் தொடர்பாக படிவம் 7–னை பூர்த்தி செய்தும், பட்டியலில் திருத்தம் தொடர்பாக படிவம் 8–னை பூர்த்தி செய்தும், சட்டமன்ற தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 8–A யினை பூர்த்தி செய்தும் அதற்கான ஆவண ஆதார நகலினை இணைத்தும் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரின் அலுவலகத்தில் 01.09.2018 முதல் 31.10.2018 முடிய உள்ள காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம்.

மேலும் 09.09.2018, 23.09.2018, 07.10.2018 மற்றும் 14.10.2018 (ஞாயிற்றுக்கிழமைகளில்) ஆகிய நாட்களில் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. அது சமயம் பொதுமக்கள் உரிய படிவங்களை பெறவும், பூர்த்தி செய்த படிவங்களை அளிக்கவும், இந்தச் சிறப்பு முகாம்களை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் பொதுமக்கள் இணையதளம் மூலமாகவும் தங்களுடைய பெயர்கள் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள விண்ணப்பிக்கலாம். (இணையதள முகவரி – www.elections.tn.gov.in மற்றும் nvsp.in). விண்ணப்பங்களை வலைதளம் மூலமே மேற்கொள்ள வாக்காளர்கள் கோரப்படுகின்றனர்.

சென்னை மாவட்டத்தில் கடந்த முறை 3768 வாக்குச்சாவடிகளும் 2 துணை வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டிருந்தன. தற்சமயம் வாக்குச்சாவடிகள் மறுசீரமைக்கப்பட்டு சென்னை மாவட்டத்தில் 3754 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, இன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் அதன் அடிப்படையில் வெளியிடப்படுகிறது, அதிகபட்சமாக பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் 297 வாக்குச்சாவடிகளும், குறைந்தபட்சமாக எழும்பூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் 169 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 10.01.2018 அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை 18,76,652 ஆகும். பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 19,24,366 ஆகும். இதர வாக்காளர்களின் எண்ணிக்கை 901 ஆகும். சென்னை மாவட்டத்தின் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 38,01,919 ஆகும்.

நடைபெற்று முடிந்த தொடர்திருத்தத்தில் சென்னை மாவட்டத்தில் 3,526 ஆண் வாக்காளர்கள் மற்றும் 3,629 பெண் வாக்காளர்கள் மற்றும் 5 இதர வாக்காளர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் 8,540 ஆண் வாக்காளர்கள், 8413 பெண் வாக்காளர்கள் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலின்படி சென்னை மாவட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை சட்டமன்றத்தொகுதி வாரியாக கீழ்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | சட்டமன்ற தொகுதியின் எண். மற்றும் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதர வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | 110169 | 116553 | 99 | 226821 |
| 2. | எண்.12, பெரம்பூர் | 146458 | 149556 | 44 | 296058 |
| 3. | எண்.13, கொளத்தூர் | 127626 | 132013 | 61 | 259700 |
| 4. | எண்.14, வில்லிவாக்கம் | 119192 | 122642 | 56 | 241890 |
| 5. | எண்.15, திரு.வி.க.நகர் | 102713 | 108449 | 47 | 211209 |
| 6. | எண்.16, எழும்பூர் | 87882 | 89343 | 35 | 177260 |
| 7. | எண்.17, ராயபுரம் | 84868 | 88187 | 45 | 173100 |
| 8. | எண்.18, துறைமுகம் | 86294 | 78597 | 48 | 164939 |
| 9. | எண்.19, சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி | 111072 | 115173 | 27 | 226272 |
| 10. | எண்.20, ஆயிரம் விளக்கு | 114482 | 119344 | 83 | 233909 |
| 11. | எண்.21, அண்ணாநகர் | 134168 | 137882 | 70 | 272120 |
| 12. | எண்.22, விருகம்பாக்கம் | 131699 | 131514 | 71 | 263284 |
| 13. | எண்.23, சைதாப்பேட்டை | 130599 | 134025 | 68 | 264692 |
| 14. | எண்.24, தியாகராய நகர் | 112442 | 114506 | 38 | 226986 |
| 15. | எண்.25, மயிலாப்பூர் | 125250 | 132646 | 34 | 257930 |
| 16. | எண்.26, வேளச்சேரி | 146724 | 149152 | 80 | 295956 |
| | மொத்தம் | 1871638 | 1919582 | 906 | 3792126 |

மொத்த வாக்காளர் எண்ணிக்கை 3792126. குறைந்தபட்சமாக 18–ம் எண் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 1,64,939 வாக்காளர்களும், அதிகபட்சமாக 12–ம் எண் பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் 2,96,058 வாக்காளர்களும் உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.ஏ.பெருமாள், அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**